N13/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

88132331

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Tuesday 12 November 2013 (afternoon)
Mardi 12 novembre 2013 (après-midi)
Martes 12 de noviembre de 2013 (tarde)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for paper 1.
- Answer the questions in the question and answer booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N’ouvrez pas ce livret avant d’y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l’épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.


© International Baccalaureate Organization 2013

https://xtremepape.rs/

பனுவல் A

# பார்வையற்றவரின் தன்னலமற்ற சேவை

❶ ஐம்பத்தைந்து வயது நிரம்பிய முகமது யாகூப் மன்சூரி பிறவியிலேயே பார்வை இல்லாதவர். ஆனால், நம்மில் பலர் கண்ணிருந்தும் பெறமுடியாத நிறைவான வாழ்வை இவர் வாழ்கிறார். பீகாரிலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் முகமது யாகூப், கடந்த இருபது ஆண்டுகளாகக் "கவ்வாலி" பாடல்களைப் பாடி நன்கொடைகளைப் பெற்று வருகிறார். இவ்வாறு வசூலித்துள்ள நன்கொடைத் தொகையான முப்பத்தெட்டு லட்சத்தைச் செலவிட்டு, எழுபத்தெட்டுக்கு மேற்பட்ட ஏழை இந்து, முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்துவித்திருக்கிறார்.

❷ மேலும், இவர் கோவில்கள், பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும் நிதியுதவி வழங்கியுள்ளார். பாடிப் பிழைப்பு நடத்தினாலும் இவரை எவரும் யாசகராக எண்ணுவதில்லை. நன்கொடை அளிப்பவர்களும் இவர் மீது பெருமதிப்புக் கொண்டுள்ளனர். "தீ வீக்" என்னும் பத்திரிகை நிருபர் ஒருவர் இவரைப்பற்றிக் கேள்விப்பட்டுச் செய்திகள் திரட்ட இவரைத் தேடி வந்தார். முகமது யாகூப் ஒருநாளை எவ்வாறு கழிக்கின்றார் என்பதை உடனிருந்து அவர் கண்டறிந்தார்.

❸ காலை எட்டு மணிக்கு முகமது யாகூப் தமது இளைய மகனின் துணைகொண்டு "நன்கொடை" வசூலுக்குப் புறப்படுகிறார். தம் இளையமகன் பள்ளி செல்வதால் அவனைத் தன்னுடன் நீண்டநேரம் அவர் நிறுத்தி வைத்துக்கொள்வதில்லை. வசூலில் பெறும் தொகையை என்றும் தம் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்தியதுமில்லை. பெறும் நன்கொடையை ஒரு பெட்டியில் போட்டுச் சேமித்து ஆண்டிறுதியில் அதை நற்காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்.

❹ தொடக்கத்தில் கிராமத்து மக்கள் இவருக்கு உதவ அவ்வளவாக ஊக்கம் காட்டவில்லை. இவரின் நல்லுள்ளத்தைப் புரிந்துகொண்ட பின்னர் இவருக்கு எல்லா வகையிலும் மக்கள் உறுதுணையாக இருந்துவருகின்றனர். திருமணங்கள் செய்விப்பதோடு நின்றுவிடாமல், இவர் அந்தத் தம்பதியர் வாழ்க்கை எப்படியுள்ளது என்பதையும் அவ்வப்போது அக்கறையுடன் கவனித்து வருகிறார்.

❺ இவரது தன்னலமற்ற சேவையை மதித்துப் பாராட்டி, அவருக்கு எல்லா வழிகளிலும் உதவப் பீகார் அரசு முன்வர வேண்டும் எனக் கிராமத்து மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எந்நிலையிலும் ஒருவர் பயனுள்ள வாழ்க்கை வாழலாம் என்பதற்கு முகமது யாகூப் ஒரு நல்ல சான்று.

மஞ்சரி – பக் 61, 62 ஆசிரியர் – ஆர். நாராயணஸ்வாமி,
1, Sanskrit College Road, Mylapore, Chennai – 600004 (2010)



https://xtremepape.rs/

**பனுவல் B**

# பாட்டுக்கோட்டை கட்டிய கல்யாணசுந்தரம்



தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை ஊரைச் சார்ந்த ஒரு கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். பள்ளிப் படிப்போ மிகக் குறைவுதான். ஆனால், வாழ்க்கை புகட்டிய அனுபவங்களோ ஏராளம். அவருடைய தந்தையும் தமையனும் நாட்டுப்பாடல் கவிஞர்களாகத் திகழ்ந்தவர்கள். கிராமத்தில் விவசாயம், வியாபாரம், நாடகம் எனப் பல வேலைகளில் ஈடுபட்டுத் தம் தனித்திறமையால் கவிதைத்தொழிலுக்கு வந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

அவர் ஏறத்தாழ ஐம்பத்தைந்து திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். இவற்றோடு பத்திரிகைகளிலும் அவர் இயற்றிய பாடல்கள் வெளிவந்துள்ளன. அவருடைய படைப்புகளில் பெரும்பான்மை திரைப்பாடல்களாக இருப்பதால்தான் அவர் வாழ்ந்த காலத்திலும் அதற்குப் பின்னரும் மக்கள் போற்றும் கவிஞராகத் திகழ்கிறார். திரைப்படம் என்னும் சாதனத்தை நன்கு புரிந்துகொண்டு அதன் வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தம் கவித்திறமையை உலகறியச் செய்து வெற்றி கண்டார்.

திரையுலகில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வரவு புத்துணர்ச்சியை ஊட்டியது. கிராமத்தின் பின்னணியை நன்கறிந்த கவிஞர் தாம் இயற்றிய பாடல்களில் பெரும் மாற்றங்களைப் புகுத்தினார். நாட்டுப்புறப் பாடல்களைத் தழுவிப் பல திரைப்பாடல்கள் உருவாகக் காரணமாக அமைந்தார். நிகழ்கால வாழ்க்கைச் சிக்கல்களை மிக இலாவகமாகக் கேட்பவர் நெஞ்சைப் பிணிக்கும் வகையில் பாடல் புனைவதில் தன்னிகரற்ற ஆற்றல் படைத்தவராக விளங்கினார் கல்யாணசுந்தரம்.

நாட்டுப்புறப் பாடல்களே உழைக்கும் வர்க்கத்தினரின் இலக்கியமாக இருந்தது. பல்வேறு காலமாகச் சமூகத்தில் நசுக்கப்பட்டு வந்துள்ள கிராம மக்களின் ஆவேசமும் உரிமைக்குரலும் நாட்டுப்புறப் பாடல்களில் எதிரொலித்தன. அடித்தட்டு மக்களின் இன்ப துன்பங்களைச் சித்திரிப்பவையாக அவை இருந்தன. அப்பாடல்களின் மெட்டுகள் மட்டுமன்றிக் கருத்துகளும் கேட்போரைக் கவரும் தன்மையுடையனவாய் இருந்தன.

இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களுக்கே பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திரைப்பாடல்கள்வழி புத்துயிர் ஊட்டினார். அவரின் பாடல்கள் முழுவதும் எளிமை, இனிமை, வன்மை, நேர்மை முதலான பண்புகளை வலியுறுத்துவனவாக இருந்தன. பாரதியாருக்குப் பிறகு, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களிலேயே பொதுவுடைமைச் சிந்தனைகள் வலிமையுடன் வெளிப்படும் நிலையை நம்மால் பார்க்க முடிகிறது. அவருடைய பாடல்கள் பலவும் உயிர்த்துடிப்புள்ள மக்கள் இலக்கியம் எனப் போற்றப்படுவதற்கு இதுவே அடிப்படையாகும்.

கவிஞர் கல்யாணசுந்தரம் வாழ்ந்த காலம் மிகக் குறைவு. அவர் தம் இருபத்தொன்பதாவது அகவையில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். ஆயினும், தாம் வாழ்ந்த காலத்தில் அவர் இயற்றிய பாடல்கள் ஒவ்வொன்றும் இறவாப்புகழ் பெற்று இன்றளவும் ஒளிர்கின்றன என்பதில் ஐயமில்லை.

மயில் – ஆசிரியர்; ஆ.சோதிநாதன் – பக்கங்கள் – 16 & 17. – 85 CP, Jalan Perhentian, Sentul, 51100, Kuala Lumpur, Malaysia (2012)



https://xtremepape.rs/

**பனுவல் C**

# ஒற்றுமையே இனிய இல்லறத்திற்கு வழி

*[ – X – ]*

❶ இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள பிற நாட்டவர்கள் இந்தியாவின் எளிய, இனிய குடும்பவாழ்க்கை முறைகளைக் கண்டு வியந்து பாராட்டியுள்ளனர். அத்தகைய உன்னதமான குடும்ப வாழ்க்கை மேலை நாட்டு நாகரிகத்தின் தாக்கத்தால் சற்றே நலிவடைந்து வருகிறது. பெரு நகரங்களில் தொடங்கிக் கிராமங்கள் வரை அதன் தாக்கம் வேகமாகப் பரவி வருகிறது.

**[ – 20 – ]**

❷ இந்திய பாரம்பரியத்தில் குடும்பக் கடமைகளில் தம்பதியரிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேற்றுமை இருந்ததில்லை. குடும்பம் சீராக இயங்குவதற்கு இருவரது பணிகளுமே தடையின்றி நடைபெற்றுக் குடும்ப வாழ்க்கை இனிமையும் மகிழ்ச்சியும் நிறைந்தவையாகவே இருந்து வந்துள்ளது.

**[ – 21 – ]**

❸ அக்காலத்தில், வெளியில் சென்று உழைத்துக் களைத்துவரும் ஆண்களுக்குத் தக்க உணவு படைத்தும் பணிவிடைகள் செய்தும் மனநிறைவு கொண்டார்கள் இல்லத்தரசிகள். இப்போதுள்ள எந்த நவீனச் சாதனங்களும் இல்லாத போதும், சில அடிப்படைத் தேவைகள் இல்லாத நிலையிலும் அவர்களின் வாழ்க்கை முறையில் அவரவர் வசதிக்கேற்றவாறு தன்னிறைவு கொண்டார்கள்.

**[ – 22 – ]**

❹ தற்கால வாழ்க்கை முறையில் அதிநவீனச் சாதனங்களும், நவ நாகரிக உடைகளும், பகட்டான வாழ்வும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன. படிப்பறிவும், பட்டங்களும் பெற்றுத் தொழில்கள் பல செய்து அதிக அளவில் குடும்பங்கள் இன்று பொருளீட்டுகின்றன. ஆயினும், குடும்பங்களில் பல சிக்கல்களும், மோதல்களும் பெரிய அளவில் தோன்றிக் குடும்பப் பிணைப்பையே சீரழிக்கின்றன. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் வெளியில் சென்று பணிபுரிந்து பொருளீட்டி வந்தும் குடும்பத்தில் ஒற்றுமை எட்டாக் கனியாக ஆனது எப்படி?


**[ – 23 – ]**

❺ பொருள் மட்டும்தான் வாழ்க்கையா? இல்லை. அன்பும் அரவணைப்பும்தான் குடும்பத்திற்கு அவசியம் என்பதை ஏனோ பலரும் மறந்துவிடுகின்றனர். பணமே முக்கியம் என எண்ணும் குடும்பங்களில்தான் சண்டை சச்சரவுகள் அடிக்கடி தோன்றிக் குடும்ப ஒற்றுமையையே குலைத்துவிடுகின்றன. இதனால் அதிகம் பாதிப்படைவது குழந்தைகளே. இக்காலத்தில் கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதில் தவறில்லை. ஆனால், குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு செய்வதில் நல்ல புரிந்துணர்வு இருவருக்கும் இருத்தல் அவசியம். அமைதியான வழியில் குடும்பத்தை நடத்த முடியாதபோது கைநிறையப் பொருளீட்டிப் பயன் இல்லை.



https://xtremepape.rs/

❻ நம் மூத்தோர் வாழ்ந்த வாழ்க்கையோடு நம்முடைய இக்கால வாழ்க்கையை *[ – X – ]* பார்க்கும்போது, நாம் மேம்பட்ட வசதிகளோடு வாழ்கிறோம். அதிக அளவில் நவீனச் சாதனங்களின் **[ – 29 – ]** வீட்டில் உண்டு. ஆடை அணிகலங்களுக்குக் குறைவில்லை; கணினி, இணைய வசதியுடன் பலரோடு தொடர்புகொள்வதில் **[ – 30 – ]** இல்லை. ஆனால், நம் முன்னோர் வாழ்வில் இருந்த அமைதியும், இனிமையும் தற்கால வாழ்க்கையில் இல்லை. நல்ல வாழ்க்கை முறையை உதாசீனப்படுத்திவிட்டு, மேலை நாட்டு வாழ்க்கை முறையை **[ – 31 – ]** கருதி அதைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றியதால் ஏற்பட்ட விளைவுகளே இவை. நம்மை ஆட்டிப் படைக்கும் தொழில்நுட்பக் கருவிகளுக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களோடு **[ – 32 – ]** பேசிப் பழகிக் குடும்பப் பிணைப்பை வளர்த்துக்கொள்வது இன்றியமையாததாகும். இதனால் மட்டுமே வாழ்க்கையில் அமைதியையும் மகிழ்ச்சியையும் காண முடியும் என்னும் உண்மையை நாம் யாவரும் உணர வேண்டும்.



கலைமகள் – பக்கங்கள் 54, 55, 56, – ஆசிரியர் – ஆர். நாராயணஸ்சுவாமி,
1 சமஸ்கிருதக் கல்லூரித் தெரு, மயிலாப்பூர், சென்னை 600004 (2012)



https://xtremepape.rs/

பனுவல் D

# கைபேசி – வரமா? சாபமா?

❶ இந்த நூற்றாண்டின் மிகப் பிரபலமான சாதனம் என்றால் அது கைபேசிதான். படித்தவர் முதல் பாமரர் வரை எல்லாருக்கும் பரிச்சயமான பொருளும் இதுவே. அவசரத்திற்குக் கைகொடுக்கும் அற்புதத் தொடர்புக் கருவி என்று இதைப் புகழாதவர்களே இல்லை.

பேசுவது என்பதையும் தாண்டி, குறுஞ்செய்தி, இணையம், இசை, புகைப்படக்கருவி எனக் கைபேசியில் இல்லாத வசதிகளே இல்லை. எதிர்முனையில் பேசுபவரின் முகம் திரையில் தெரியும் தொழில்நுட்பமும் இப்போது வந்துவிட்டது. சுருங்கச் சொன்னால் கைபேசி ஒரு சிறு கணினியாக நம் கையில் தவழ்கிறது.

❷ தொழில்நுட்பத்தில் வரவேற்கத்தக்க முன்னேற்றந்தான். ஆனால், ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர்வினை உண்டு என்னும் நியூட்டனின் விதிக்குக் கைபேசியும் விதிவிலக்கல்ல. இதில் சாதகங்களுக்கு சற்றும் குறைவில்லாமல் நிறைந்திருக்கின்றன பாதகங்களும்!



❸ சட்ட விரோத செயல்களான, தேர்வில் காப்பியடித்தல், ஆபாசப் படங்களை அனுப்புதல், தொல்லை தரும் குறுஞ்செய்திகள் அனுப்புதல் எனக் கைபேசியைக் கொண்டு பலவிதமான குற்றச்செயல்கள் பல்கிப் பெருகுகின்றன. மேலும், கைபேசியால் உடல்நலத்திற்கும் தீங்கு ஏற்படுவதாக மருத்துவர்கள் உறுதிபடக் கூறுகிறார்கள். அதிக நேரம் கைபேசியில் பேசுவதாலும், இசை கேட்பதாலும் பலருக்குக் காது நரம்பில் பாதிப்பு ஏற்படுகிறது. உடனடி சிகிச்சை இல்லையெனில் நிரந்திரப் பாதிப்பு நிச்சயம் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

❹ சில சமயம் கைபேசி உயிரைப் பறித்துவிடும் ஆபத்தையும் ஏற்படுத்துகிறது. கைபேசியில் பேசும் சுவாரஸ்யத்தில் சாலையில் கவனக்குறைவாக இருப்பவர்கள் தம் அலட்சியத்திற்குக் கொடுக்கும் விலை அதிகம். சிலர் கவனமின்றித் தண்டவாளத்தைக் கடக்க முயன்று இரயில் மோதி இறந்த சம்பவங்கள் பற்றிய செய்திகள் பத்திரிகையில் வருவதுண்டு.

❺ அடுத்த அதிர்ச்சி மனநலம் தொடர்பானது. கைபேசிக்கு அடிமையாகும் “கைபேசி சிண்ட்ரோம்” எனப்படும் மனநலப் பிரச்சினையும் சத்தமில்லாமல் பரவி வருகிறது. எல்லா நேரமும் கைபேசியிலேயே வேலையாய் இருப்பது, தேவையின்றி அடிக்கடி கைபேசியை எடுத்துப்பார்ப்பது, சாப்பிடும்போதும் கைபேசியைக் கைவிடாமல் இருப்பது போன்ற பல நிலைகளில் கைபேசிக்கு அடிமைப்பட்டுக் கிடப்போரில் இளைஞர்களின் எண்ணிக்கையே அதிகம்.

❻ உலகின் எந்த மூலையிலிருந்தும் யாரோடும் நினைத்த மாத்திரத்தில் தொடர்புகொள்ள உருவாக்கப்பட்டதே கைபேசி. வியாபார நோக்கில் பல வசதிகள் அதில் சேர்க்கப்பட்டிருந்தாலும் நமக்கான தேவைக்கு மட்டும் அவற்றைப் பயன்படுத்தினால் நம் உடலும் உள்ளமும் பாதிப்புறாமல் இருக்கும்.

புதிய தலைமுறை – 10, 11, 12 – ஆசிரியர் ஆர்.பி. சத்தியநாராயணன்,
24, ஜி.என். செட்டி ரோடு, சென்னை – 600017 (2009)



https://xtremepape.rs/